# Catholic Bishop's House

**Rt Rev. S. Antonysamy D.D., D.C.L.,**
**Bishop of Palayamkottai**

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)


20.03.2020

அன்புக்குரிய குருக்களே, துறவியரே, இறைமக்களே,

இன்று மனுக்குலம் ஓர் அசாதாரணச் சூழ்நிலையை சந்தித்துக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். கடந்த சில மாதங்களாக கொரோனா குடும்பத்தைச் சார்ந்த “கோவிட்-19” என்னும் நோய்கிருமி மரண பயத்தை விடுத்து நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. இச்சூழ்நிலையில் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள நமது மத்திய, மாநில அரசுகள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கொடுத்துள்ளன. அதன் அடிப்படையில் இந்திய குடிமக்களாகிய நாம் நமது அரசு காட்டும் நெறிமுறைகளைக் கடைபிடித்து நம்மை பாதுகாத்துக்கொள்வதும் இன்றியமையாதது. எனவே நமது மறைமாவட்டத்தில் கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துகிறேன்.

1. இன்று முதல் (20.03.2020) மார்ச் 31, 2020 வரை நமது மறைமாவட்டத்தில் திருப்பலி உட்பட்ட அனைத்து பொது வழிபாடுகளும் பக்திமுயற்சிகளும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகின்றன. எனவே ஞாயிறு கடன் திருப்பலி, தினசரி திருப்பலி, மற்றும் சிலுவைப்பாதையில் பங்கு பெறுவதிலிருந்து உங்களுக்கு நான் விலக்கு அளிக்கிறேன்.
2. ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குடும்ப உறுப்பினர்கள் தத்தம் இல்லங்களில் செபமாலை செபித்தல், சிலுவைப்பாடுகளைத் தியானித்தல், திரு விவிலியத்தை வாசித்தல் போன்ற பக்திமுயற்சிகளைச் செய்யுமாறு அறிவுறுத்துகிறேன்.
3. தவக்காலத்தை முன்னிட்டு பங்கு அளவில் திட்டமிடப்பட்ட சிறப்பு வழிபாடுகள், நவநாட்கள், சிலுவைப்பாதை, திருப்பயணம், அன்பிய மற்றும் பக்தசபைக்கூட்டங்கள் போன்றவற்றை தவிற்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
4. குடும்பத்திலுள்ள முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகள் போன்றவர்களைச் சிறப்பு கவனத்துடன் நோய் தொற்று பாதிப்புக்குள்ளாகாமல் பராமரிக்க கேட்டுக்கொள்கின்றேன்.
5. மத்திய, மாநில அரசுகள் இந்த நோய் தொற்றைத் தடுக்க அவ்வப்போது எடுக்கும் முயற்சிகளையும், வழிகாட்டுதல்களையும் கவனமோடு கடைபிடிக்க அறிவுறுத்துகிறேன்.
6. இந்த நாட்களில் குழு செபத்தைத் தவிர்த்து, தனிநபர் செபத்திற்காக ஆலயங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.
7. தங்களின் பங்குச் சூழலுக்கு ஏற்ப குருக்களும், துறவியரும் மேய்ப்புப்பணி விவேகத்தோடு செயல்பட அறிவுறுத்துகிறேன்.

மேலும் மறு அறிவிப்பு வரும் வரை நோய் தொற்று சம்பந்தமாக நமது அரசு விடுக்கக்கூடிய அனைத்து வழிகாட்டுதல்களையும் சமூக அக்கறையோடும் கிறிஸ்தவ பிறரன்பு உணர்வோடும் கடைபிடித்து அனைவரின் நலம் பேண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நோயிலிருந்து குணமளிக்கவும், தீய சக்திகளின் பிடியிலிருந்து விடுதலை அளிக்கவும் கடவுளால் அனுப்பப்பட்ட அதிதூதர் இரபேல் நம் அனைவரையும் இப்பேராபத்திலிருந்து பாதுகாப்பாராக. ஆசீர்!

இயேசுவில் அன்புடன்,

+ S. Antonysamy

ச. அந்தோனிசாமி
பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்.

Rt Rev. S. Antonysamy, D.D., D.C.L.
Bishop of Palayamkottai